RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 160 | ஜூன்.17 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







# ரூ.75 ஆயிரம் வரை பயிர்க்கடன் முழுவதும் தள்ளுபடி; தமிழக அரசு அறிவிப்பு

சென்னை: ஜூன்.17-

கூட்டுறவு வங்கிகளில் ரூ.75 ஆயிரம் வரையிலான பயிர்க்கடன் 100 சதவீதம் தள்ளுபடி செய்து தமிழக முதல்வர் விஜய் அறிவித்தார்.

தமிழக அரசு ஏற்கனவே பயிர்க்கடன் தள்ளுபடி அறிவிப்பை வெளியிட்டிருந்தது. ரூ.50 ஆயிரம் வரையிலான பயிர்க்கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன. அதற்கு மேல் கடன் இருப்பவர்களுக்கு, வெவ்வேறு விதமான தள்ளுபடிகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அரசின் அறிவிப்பில் குறைபாடுகள் இருப்பதாகவும், வாக்குறுதி அளித்தபடி முழுவதும் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் விவசாயிகள் சங்கத்தினர், அரசியல் கட்சியினர் கோரி வந்தனர்.



இந்நிலையில், பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கை: கூட்டுறவு வங்கிகளின் மூலம் ரூ.75 ஆயிரம் வரை பயிர்க்கடன் பெற்ற குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிகளுக்கு 100 சதவீதம் முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு மே மாதம் முதல் நடப்பாண்டு பிப்ரவரி வரை பயிர் கடன் பெற்ற 14.43 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.6,000 கோடி வரை தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன்மூலம் கடந்த நிதியாண்டில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சமாக ரூ.75 ஆயிரமும் குறைந்தபட்சமாக ரூ.35 ஆயிரமும் பணப்பயன் கிடைக்கும். இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடி, எதிர்வரும் சாகுபடி பருவத்திற்கு கடன் பெற விரும்பும் விவசாயிகளுக்கு பெருமளவில் பயன்தரும்.

* 8,33,773 குறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.3,599.67 கோடி

* 5,16,183 சிறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.1,995.42 கோடி

* 93,548 இதர பெரு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.337.15 கோடி

14,43,504 விவசாயிகளுக்கு உத்தேச பயிர் கடன் தள்ளுபடித்தொகை ரூ.5,932.23 கோடி ஆகும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



## மின் கட்டண உயர்வு: பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை அமைச்சர் நிர்மல்குமார் தகவல்

சென்னை: ஜூன்.17-

"ஒவ்வொரு வருடமும் மின் கட்டணத்தை ஆண்டுக்கு அதிகபட்சமாக 6 % உயர்த்திக் கொள்ளாலாம் என திமுக ஆட்சியில் கொண்டு வந்த பாலிசியே தவறானது. இதனால் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மின் கட்டண உயர்வு குறித்து முதல்வருடன் ஆலோசனை செய்து, மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்," என மின் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "ஆண்டுதோறும் மின் கட்டணத்தை எவ்வாறு உயர்த்த வேண்டும் என 2022ல் போடப்பட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் கட்டண உயர்வு குறித்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து முதல்வர் மற்றும் அதிகாரிகளிடம் ஆலோசனை செய்துவிட்டு, முடிவெடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் மின் கட்டணத்தை ஆண்டுக்கு அதிகபட்சமாக 6% உயர்த்திக் கொள்ளாலாம் என திமுக ஆட்சியில் கொண்டு வந்த பாலிசியே தவறானது. இதனால் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

சிறைச்சாலைகளில் தேவையில்லாமல் டிரன்ஸ்பர்கள் நடப்பதாக புகார் வந்துள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். வெளிப்படைத் தன்மையுடன் இனி டிரான்ஸ்பர்கள் நடக்கும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நீட் மறுதேர்வு முடியும் வரை 'டெலிகிராம்' செயலிக்கு இந்தியாவில் தடை

புதுடெல்லி: ஜூன்.17-

நீட் மறுதேர்வு வரும் ஜூலை 2ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், இந்தத் தேர்வு முடியும் வரையில் டெலிகிராம் மெசேஜிங் செயலிக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பிறப்பித்துள்ளது. இதை தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்காக நீட் (யுஜி) நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. அந்த வகையில், நடப்பு கல்வி ஆண்டு சேர்க்கைக்கான நீட் தேர்வு மே 3ம் தேதி நடந்தது. வினாத்தாள் கசிந்ததால் அத்தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும் நீட் மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடத்தப்படும் என்றும் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்தது.




நீட் வினாத்தாள் கசிவு விவாகரத்தை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன. சமூக வலைதளம் மூலம் பிரபலமான கரப்பான் பூச்சி ஜனதா கட்சி, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் போராட்டம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், நீட் மறுதேர்வுக்கான ஹால் டிக்கெட்டை தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து வருகின்றனர்.

இச்சூழலில், இந்த தேர்வு முடியும் வரையில் டெலிகிராம் மெசேஜிங் செயலிக்கு தடை விதிக்க வேண்டும் என அரசுக்கு தேசிய தேர்வு முகமை பரிந்துரைத்துள்ளது. அதன்படி மத்திய அரசு அந்த செயலிக்கு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

அரசின் இந்த வழிகாட்டுதலை தேசிய தேர்வு முகமை வரவேற்கிறது. தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000இன் பிரிவு 69ஏன் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தியாவில் 'டெலிகிராம்' அக்சஸ், நீட் மறுதேர்வு நடைபெற்று முடியும் வரை தடை செய்யப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதோடு இந்தச் செயலியில் ஜூன் 30 வரை மெசேஜ் எடிட்டிங் அம்சத்தை தற்காலிமாக தடை செய்யுமாறும் கோரியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

டெலிகிராம்: கடந்த 2013ல் அறிமுகமான மெசேஞ்சர் செயலிதான் டெலிகிராம். இதனை பாவெல் துரோவ் மற்றும் அவரது சகோதரர் நிகோலா துரோவ் இணைந்து தொடங்கினர். நிதி மற்றும் ஐடியாலஜி சார்ந்த பணியை பாவெலும், டெக்னிக்கல் சமாச்சாரங்களை நிகோலாவும் கவனித்துக் கொள்கின்றனர்.

தனிநபர்களுக்கு இடையே, குரூப் மற்றும் சேனல்ஸ் என இதன் பயனர்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். இதன் குரூப் சேட்டில் இரண்டு லட்சம் பயனர்கள் வரை அனுமதிக்கப்படுகிறார்கள். துபாயை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் டெலிகிராம் தளத்தில் 950 மில்லியன் பயனர்கள் ஆக்டிவாக பயன்படுத்தி வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. வாட்ஸ்அப்பில் உள்ள அனைத்து அம்சங்களும் இதில் உள்ளன.

இதில் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆக்டிவாக செயல்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இதில் சுமார் 2 லட்சம் பேர் வரை இணைந்து செயல்படும் சூப்பர் குரூப் அம்சம் உள்ளது. அதனால் போலிச் செய்திகளை பகிர்வது மிக சுலபம் என தொழில்நுட்ப வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக நீட் மறுதேர்வு முடியும் வரை இந்தியாவில் இந்த செயலி தடை செய்யப்பட்டுள்ளது.

## "தொண்டர்களின் மனதை வெல்ல முடியாத தலைமை, மக்களின் மனதை வெல்லுமா?" சி.விஜயபாஸ்கர்

சென்னை: ஜூன்.17-

"உழைக்கும் தொண்டர்களின் மனதை வெல்ல முடியாத தலைமை, மக்களின் மனதை எப்படி வெல்லும்?" என தனது எக்ஸ் பக்கப் பதிவு மூலம் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை மறைமுகமாக விமர்சித்திருக்கிறார் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர்.

2026 சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு, எடப்பாடி பழனிசாமி மற்றும் சி.வி.சண்முகம் எஸ்.பி.வேலுமணி அணி என இரு தரப்பாக அதிமுகவில் உட்கட்சிப் பூசல் ஏற்பட்டது. பின்னர் எஸ்.பி.வேலுமணி இபிஎஸ்ஸுடன் சமாதானம் ஆனார்.

சி.வி.சண்முகம், கடந்த ஞாயிற்றுக் கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோது, "அதிமுக ஒரு குடும்பத்தின் பிடிக்குள் செல்கிறது. கட்சி காப்பாற்றப்பட வேண்டும். கட்சியின் செயற்குழு கூட்டத்தையாவது உடனடியாகக் கூட்ட



வேண்டும்" என்று கட்சித் தலைமையின் மீது சரமாரி குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இந்தச் சூழலில், சி.விஜயபாஸ்கரும் தவெகவில் இணையப் போவதாகச் செய்திகள் பரவிய நிலையில், அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவு கவனம் பெற்றுள்ளது.,

அதிமுக தலைமை மீதான அதிருப்தியை மீண்டும் அவர் பதிவு செய்துள்ளதாகப் பார்க்கப்படுகிறது.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தலைமை என்பது அதிகாரமோ, ஆணவமோ அல்ல. 'அர்ப்பணிப்பு மிகுந்த அரவணைப்பு'. உழைக்கும் தொண்டர்களின் மனதை வெல்ல முடியாத தலைமை, மக்களின் மனதை எப்படி வெல்லும்? உணர்வுகளை மதிக்காத இடத்தில் உண்மையான பயணம் சாத்தியமா?" எனப் பதிவிட்டுள்ளார்.

இதன்மூலம், சி.விஜயபாஸ்கர் தவெகவுக்கு செல்ல முடிவு எடுத்துவிட்டது போலவும், அதற்கு அதிமுக தலைமை தான் காரணம் என்பதுபோலவும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## நான் 6 மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா? முதல்வர் விஜய்க்கு மு.க.ஸ்டாலின் கேள்வி

சென்னை: ஜூன்.17-

மக்களின் உயிரும், குழந்தைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ள நிலையிலும், நான் 6 மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா ? என்று முதல்வர் விஜய்க்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்: "Efficientஆன அதிகாரிகளை நியமித்துவிட்டேன்", "சிங்கப்பெண் படையை அமைத்துவிட்டேன்" என்று சீறிய முதல்வரின் காதுகளுக்கு இந்தச் செய்திகளைப் பார்த்த பிறகாவது, பிஞ்சுகளை இழந்து ஓலமிடும் பெற்றோர்களின் அழுகுரல் கேட்கவில்லையா ?

மக்களின் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு 'கால்ஷீட்' எப்போது ?. கிரிமினல்கள் சிறிதும் அச்சமின்றி குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை



என்ன ?. சவாலும் சவடாலும் விட்டவர், எப்போது Silent Mode-ல் இருந்து வெளியே வருவார் ?. மக்களின் உயிரும், குழந்தைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ள நிலையிலும், நான் ஆறு மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா?. இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் போராட்டத்தை எதிர்பார்க்கிறீர்களா?. என்று மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளார்.

கும்மிடிப்பூண்டி அருகே புதுப்பேட்டை பகுதியில் 3 வயது பெண் குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பிஹார் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சூழலில், மக்களின் உயிரும், குழந்தைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ள நிலையிலும், நான் ஆறு மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா? என்று முதல்வர் விஜய்க்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது




## சிரப்களை வாங்க மருத்துவரின் பரிந்துரை கட்டாயம்: ஒன்றிய அரசு அறிவிப்பு

டெல்லி: ஜூன்.17-

இனி மருத்துவர்கள் பரிந்துரை செய்தால் மட்டுமே இருமல் மருந்து உள்பட அனைத்து சிரப்களும் வழங்கப்படும் என ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இருமல் மருந்து உட்பட அனைத்து வகை சிரப் மருந்துகளை பரிந்துரைச் சீட்டு இன்றி கடைகளில் நேரடியாக வாங்க முடியாது என்று ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அண்மையில் கலப்பட இருமல் மருந்தால் மத்தியப்பிரதேசத்தில் 20 குழந்தைகள் வரை உயிரிழந்த நிலையில், அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் அனைத்து மருந்தகங்களிலும் இந்த விதிமுறையை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு மருந்துகள் (5வது திருத்த) விதிகள், 2026 மூலமாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன்படி, வீட்டு உபயோக சாதாரண மருத்துவப் பொருட்களின் வரிசையில் இடம் பெற்றிருந்த 'சிரப்ஸ்' என்ற வார்த்தை அதிகாரப்பூர்வமாக நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், இதுவரை எவ்வித கட்டுப்பாடும் இன்றி விற்கப்பட்டு வந்த திரவ மருந்துகள் அனைத்தும், தற்போது கடுமையான மருந்து ஒழுங்குமுறைப் பட்டியலின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. டிரக்ஸ் டெக்னிக்கல் அட்வைசரி போர்டு (DTAB) உடன் கலந்தாலோசித்து, மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940இன் பிரிவுகள் 12 மற்றும் 33இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த இறுதி அறிவிப்பை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.



# தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் ஒருநாள் கால்பந்தாட்ட போட்டி

மாதவரம், ஜூன்.17-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு டி.கே.பி.வெட்ரன் சார்பில் ஒருநாள் கால்பந்தாட்ட போட்டி பிரேம் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக புழல் ஒன்றிய துணை செயலாளர் அண்ணாதுரை கலந்து கொண்டு விளையாட்டு சீறுடைகளை வழங்கி ஒருநாள் கால்பந்தாட்ட போட்டியினை துவக்கி வைத்தார். இதில் கால்பந்தாட்ட வீரர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.





# தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வண்டலூர் ஊராட்சி சார்பில் மாபெரும் நலத்திட்ட உதவிகள்

வண்டலூர், ஜூன்.17-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வண்டலூர் ஊராட்சி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட செயற்குழு உறுப்பினர் வண்டலூர் வி.சந்திரசேகர் என்கின்ற விஜயராஜ் அவர்கள் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் செங்கல்பட்டு மத்திய மாவட்ட கழக செயலாளர் தியாகராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள் செங்கை குமரேசன், ரவிச்சந்திரன், சாகுல் ஹமீத், கீதா சௌந்தரராஜன், அருண் என்கின்ற அப்பு, சதீஷ், முத்து, சதீஷ்குமார், கிரிதரன், காமேஷ், ராமா தேவி, பிரியா பிரதாப், கனிமொழி, செங்கல்பட்டு மத்திய மாவட்ட ஒன்றிய கழக செயலாளர் வெங்கடேசன், நரேந்திரன் அப்பு, விவேக், வினோத், செங்கல்பட்டு மத்திய மாவட்டம் நகர கழக செயலாளர் பார்த்தசாரதி, மறைமலைநகர் கோபி ,கார்த்திக், மற்றும் வண்டலூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# வடகரை ஊராட்சி அரசு ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளி விளையாட்டு திடலில் சிலம்ப மாணவமாணவிகள் புதிய உலக சாதனை



மாதவரம், ஜூன்.17-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி அரசு ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளியில் உள்ள விளையாட்டு திடலில் புழல் ஒன்றிய தமிழக வெற்றிக் கழகம் மற்றும் யுவகலை சிலம்ப அகாடமி சார்பில் தமிழ்நாடு முதல்வர் சி.ஜோசப்விஜய்ன் 52 வது பிறந்த நாளை குறிக்கும் விதமாக முதல்வரின் உருவம் வரைதல் சுமார் 52 நிமிடங்கள் தொடர்ந்து சிலம்பம் சுற்றி புதிய உலக சாதனை படைக்கும் நிகழ்ச்சி புழல் ஒன்றிய கழகச் செயலாளர் மைக்கேல்ராஜன் ஏற்பாட்டில் யுவகலை அகாடமி நிறுவனர் ரதிராஜன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டு புதிய உலக சாதனை நிகழ்ச்சினை விசில் அடித்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிலம்ப மாணவ மாணவிகள் சுமார் 52 நிமிடங்களில் சிலம்பம் சுற்றிக்கொண்டு தமிழ்நாடு முதல்வரின் முகத்தை உருவாக்கி யுனிக்கோ வோர்ல்ட் ரெகார்ட் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றனர்.பின்னர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு புதிய உலக சாதனை படைத்த சிலம்ப மாணவமாணவிகளை வெகுவாக பாராட்டி வாழ்த்தி பதக்கங்களை அணிவித்து கேடயம் மற்றும் சான்றிதழை வழங்கி கௌரவித்தார். இதில் யுனிக்கோ வேர்ல்ட் ரெக்கார்ட் நிறுவனர் சிவராமன் உள்ளிட்ட சிலம்ப பயிற்சியாளர்கள், பெற்றோர்கள் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் திரளாக கலந்து கொண்டனர்.முடிவில் தமிழ்நாடு முதல்வர் சி.ஜோசப்விஜய்க்கு அனைவரும் பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# தேனி மாவட்டம்தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இணைந்து நடத்திய வங்கிக் கடனுதவி வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டார்



தேனி, ஜூன்.17-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இணைந்து நடத்திய வங்கிக் கடனுதவி வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டார். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், தேனி மாவட்டத்தில் ''அனைவருக்கும் வீடு'' திட்டத்தின் கீழ் பயனாளிகளின் திறனுக்கேற்ற பங்களிப்புடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் (நிவிகிசீபிதிகிகிபிறி) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் சொந்த வீடு, நிலம் ஏதும் இல்லாத பொருளாதாரத்தில் நலிவடைந்த பயனாளிகளுக்கு (EWS) அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒரு வீட்டிற்கான கட்டுமானத் தொகையில் ஒன்றிய அரசின் மானியமாக ரூ1,50,000/ மற்றும் மாநில அரசின் மானியமாக ரூ 6,00,000/ முதல் ரூ.7,00,000/ வரை வழங்கப்படும். மீதமுள்ள தொகையை பயனாளிகளிடம் பங்களிப்புத் தொகையாக பெறப்பட்டு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.வீடு ஒதுக்கீடு பெற விருப்பமுள்ளவர்களிடமிருந்து புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாவட்ட நிர்வாக ஒப்புதல் பெற்று அனைவருக்கும் வீடு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், வாரிய விதிமுறைகளின் படியும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட குடியிருப்பினை பெறுவதற்கான பயனாளிகளில் பங்களிப்புத் தொகையை செலுத்த இயலாத பயனாளிகளுக்காக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி ''தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்'' மற்றும் ''இந்தியன் ஓவர்சீஸ் வங்கி'' இணைந்து வங்கிக் கடனுதவி வழங்கும் முகாம் இன்று நடத்தப்பட்டது. இம்முகாமில் சுமார் 50க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். இம்முகாமானது இன்று (16.06.2026) முதல் 25.06.2026 வரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளது. இம்முகாமில் மாவட்ட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். வங்கிக் கடனுதவி பெறுவதற்கான ஆவணங்களின் அடிப்படையில் தகுதியான பயனாளிகளுக்கு வங்கிக் கடனுதவி வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், புதியதாக வீட்டிற்கு விண்ணப்பிக்க விருப்பம் உள்ள பயனாளிகளும்விண்ணப்பதாரர் ஆதார் அட்டை மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆதார் அட்டை நகல் (கணவன் மற்றும் மனைவி), கணவன் மனைவி வாக்காளர் அடையாள அட்டை நகல் , குடும்ப அட்டை நகல் , விண்ணப்பதாரர் வங்கிக் கணக்கு புத்தகம் நகல், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்1, பான் கார்டு ஆகிய ஆவணங்களுடன் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.இம்முகாமில், முதுநிலை மண்டல மேலாளர் (ஐ.ஓ.பி) சந்திரகுமார், நிர்வாகப்பொறியாளர் .கதிரேசன், உதவி நிர்வாகப்பொறியாளர் வளர்மதி, உதவி பொறியாளர்கள் முருகேஷ்குமார்ஆனந்தகுமார் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# ஆயிரம் திருக்குறள்களுக்கு விளக்கம் வழங்கிய முனைவர் உமா ராஜாவுக்கு பாராட்டு விழா

கிருஷ்ணகிரி, ஜூன்.17-

வலையொளி YouTube) வாயிலாக நாள்தோறும் ஒரு திருக்குறளையும் அதற்கான விளக்கத்தையும் பதிவு செய்து வந்த முனைவர் உமா ராஜா, தனது 1000 வது திருக்குறள் விளக்கப் பதிவை கடந்த ஜூன் 11ஆம் தேதி நிறைவு செய்தார். இதனை முன்னிட்டு அன்பு குளோபல் ஃபேமிலி சார்பில் பாராட்டு விழா திங்கள்கிழமை மாலை அவரது இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் மொழியையும் திருக்குறளின் உயர்ந்த கருத்துக்களையும் இணையவழி மூலம் உலகம் முழுவதும் பரப்பும் நோக்கில் தொடர்ந்து மேற்கொண்ட அயராத முயற்சியை பாராட்டும் வகையில், தமிழ் ஆர்வலர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் முனைவர் உமா ராஜாவுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டதுடன், பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இவ்விழாவில் அன்பு குளோபல் ஃபேமிலி உறுப்பினர்களான சக்தி, அல்லியம்மாள், சரவணன், கவிதா ஷபீர், கண்ணன் மகேந்திரவர்மா, நரசிம்மன் கார்த்திகேயன், மணிகண்டன், அருணா, பிரியா ரோகிணி, ஜெயந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.விழாவிற்கான ஏற்பாடுகளை திருமதி உஷா அன்பு சிறப்பாக செய்திருந்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் முனைவர் உமா ராஜாவின் தமிழ்ப்பணி மேலும் சிறக்க வாழ்த்துகளை தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள இராஜகம்பீரம் கிராமத்தில், கோடை கால வெப்பத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு இலவச நீர், மோர் வழங்கும் பந்தல் திறக்கப்பட்டது. மானாமதுரை மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஏற்பாடு செய்த நிகழ்வில், எம்எல்ஏ டி.இளங்கோவன் மற்றும் மாவட்டச் செயலாளர் எஸ்.முத்துபாரதி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு குளிர்பானங்களை வழங்கினர். பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 9 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 57 ஆயிரத்து 600 மதிப்பிலான செயற்கை கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு மாவட்ட திட்ட அலுவலர் செந்தில்நாதன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டத்தில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பசலி 1435 வருவாய்த் தீர்வாயம் நடைபெற்றது.இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், இ.ஆ.ப., பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக்கொண்டு, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், வருவாய் தொடர்பான பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து மற்றும் சிறப்பாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார்.

# பல்லாவரம் பகுதி தமிழக வெற்றிகழகம் சார்பில் கழக தலைவர் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள் விழா முன்னிட்டு 4ஆம் ஆண்டு சி.எம் கோப்பை கிரிக்கெட் விளையாட்டு போட்டி



பல்லாவரம், ஜூன்.17-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் பகுதி தமிழக வெற்றிகழகம் தலைமை சார்பில் த.வெ.க கழக தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு சி.எம். கோப்பை கிரிக்கெட் விளையாட்டு போட்டி பல்லாவரம் பகுதி கழக செயலாளர் சசிகுமார் தலைமையில் சன் சிட்டி விளையாட்டு திடலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மணிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் சரத்குமார், பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி, மாவட்ட செயலாளர் மின்னல் குமார் கலந்து கொண்டனர். கிரிக்கெட் போட்டியை அமைச்சர் சரத்குமார் டாஸ்போட்டும், கிரிகெட் விளையாடியும் துவக்கி வைத்து போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு கைகுளுக்கி தனது வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். பின்னர் அமைச்சர் சரத்குமார், சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி ஜெயகிருஷ்ணன் அவர்களுக்கு நினைசு பரிசு மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் வருகையை முன்னிட்டு பட்டாசு வெடித்தும், பேண்டு வாத்தியம் முழங்க சிறப்பான வரவேற்பு அளித்தனர். இதில் பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர் உள்ளிட்ட த.வெ.க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# குன்னூர் காவல்துறை சார்பில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு

குன்னூர், ஜூன்.17-
தமிழக அரசு உத்தரவுப்படி மாநிலம் முழுவதும் போதை பொருட்கள் ஒழிப்பு நடவடிக்கை தீவிர படுத்தப்பட்டுள்ளதுடன் இளைஞர்கள் மற்றும் பள்ளிகல்லூரி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக குன்னூர் நகர பகுதிக்கு உட்பட்ட கொரியர்,மருந்து கடை மற்றும் பார்சல் சர்வீஸ் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி குன்னூர் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளர் கண்ணையன் தலைமையில் நடைபெற்றது. இதில் சந்தேகப்படும் வகையில் பார்சல் மற்றும் போதைப் பொருட்கள் குறித்த விவரம் கிடைத்தால் உடனடியாக காவல்துறையிடம் தெரிவிக்க வேண்டுமென முகாமில் கேட்டுக் கொள்ளப்பட்டது.



# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஜூன்.17-
நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் கூட்டத்தில், மாவட்ட குறைதீர்க்கும் நாள் ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 174 மனுக்களை பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில், முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழியை மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் ஏற்றுக்கொண்டு, உலக முதியோர் வன்கொடுமை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு பள்ளிகளில் நடத்தப்பட்ட பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற் அரசு பள்ளியை சேர்ந்த 9 மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

மேலும், குரும்பர் ஓவியரான கோத்தகிரி வட்டம் ஜக்கனாரை கிராமம் வெள்ளேரி கொம்பை பழங்குடியினர் கிராமத்தை சேர்ந்த காலம் சென்ற சு.கிருஷ்ணன் என்பவரின் மனைவி சீலாவிற்கு, குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட "பத்மஸ்ரீ" விருதினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் த.சரவணன், உதவி ஆணையர் (கலால்) மாதேஷ்வரன், மாவட்ட சமூக நல அலுவலர் பிரிவிணா தேவி உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டினம் அருகே கல்குட்டையில் தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்கன் கெளுத்தி மீன் வளர்ப்பு: அதிகாரிகள் திடீர் ஆய்வு





கிருஷ்ணகிரி, ஜூன்.17-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட திம்மாபுரம் ஊராட்சி கல்குட்டை கிராமத்தில் தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்கன் கெளுத்தி மீன்கள் வளர்க்கப்படுவதாகவும், அவற்றிற்கு அழுகிய முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி கழிவுகள் உணவாக வழங்கப்படுவதால் கடும் துர்நாற்றம் வீசி பொதுமக்களின் உடல்நலத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து, மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் மீன்வளத் துறை உதவி இயக்குநர் ரத்தினம் தலைமையில், மீன்வள ஆய்வாளர் சுதர்சன், சார்பு ஆய்வாளர் ரவி உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது, கல்குட்டை கிராமத்தைச் சேர்ந்த ரவி என்பவர் தனது விவசாய நிலத்தில் தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்கன் கெளுத்தி மீன்களை வளர்த்து வந்தது கண்டறியப்பட்டது. மேலும், அந்த மீன்களுக்கு அழுகிய முட்டைகள் வேக வைத்து உணவாக வழங்கப்பட்டதும் அதிகாரிகளின் ஆய்வில் தெரியவந்தது. இதையடுத்து, மீன்களுக்கு உணவாக வைக்கப்பட்டிருந்த அழுகிய முட்டைகள் மண்ணில் கொட்டி அழிக்கப்பட்டன. மேலும், கோழி இறைச்சி மற்றும் அதன் கழிவுகள் மண்ணில் புதைக்கப்பட்டன. மீன்களுக்கு உணவு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகளும் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. தடை செய்யப்பட்ட மீன் இனங்களை வளர்ப்பது மற்றும் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் செயல்படுவது தொடர்பாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்தனர். இந்த நடவடிக்கையால் அப்பகுதி பொதுமக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

# தேனி மாவட்டம்மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 374 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது





தேனி, ஜூன்.17-
தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 374 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 374 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில்2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,250/ மதிப்பிலான ஊன்றுகோல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.முன்னதாக முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, முதியோர் கொடுஞ் செயல் எதிர்ப்பு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர். பின்னர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பாக பசுமைப் பரப்பை அதிகரித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், விவசாயிகளுக்கு பனை மரக்கன்றுகளை வழங்கினார்இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) .கதிர்வேல், உதவி ஆணையர் (கலால்) பஞ் சாபகேசன், தனித்துணை ஆட்சியர் கவிதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணுபிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், பசுமைத்தோழர் அப்சனா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆம்பூர் அருகே ரூ.50 ஆயிரத்திற்கு 2 மாத பெண் குழந்தை விற்பனை

## ரூ.13 லட்சம் கொடுத்து வாங்கிய தம்பதி உட்பட 6 பேர் கைது

ஆம்பூர், ஜூன்.17-
திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே பெற்ற தாயே தனது 2 மாத பெண் குழந்தையை ரூ.50 ஆயிரத்திற்கு விற்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பலரது கைகளுக்கு மாறிய அந்த குழந்தை நாமக்கல் மாவட்டத்தில் மீட்கப்பட்ட நிலையில், குழந்தை விற்பனை தொடர்பாக தம்பதி உட்பட 6 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு தரைகாடு பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி ஷபீர் மற்றும் அவரது மனைவி ஜபீனா. இவர்கள் ஆம்பூர் அடுத்த நரியம்பட்டு பகுதியில் சுற்றிதிரிந்து பிச்சை எடுத்து வந்துள்ளார். ஜபீனாவுக்கு 2 மாதங்களுக்கு முன்பு பெண் குழந்தை பிறந்துள்ளது. அப்போது அதே பகுதியை சேர்ந்த கட்டிட மேஸ்திரி ரஷீத் அஹ்மத், ஜபீனாவை அணுகி குழந்தையை கொடுத்தால் பணம் தருவதாக கூறியுள்ளார். இதையடுத்து ஜபீனா கணவருக்கு தெரியாமல் கடந்த மாதம் ரூ.50 ஆயிரம் பெற்றுக்கொண்டு குழந்தையை ரஷித்திடம் கொடுத்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் ஜபீனா கையில் குழந்தை இல்லாததை அறிந்த கணவர் இது குறித்து மனைவியிடம் கேட்டுள்ளார்.மேலும் குழந்தை கொண்டு வந்து காட்டவில்லை என்றால் என்னோடு வாழ வைக்க மாட்டேன் என்று கூறியதால் பயந்து போன ஜபீனா மீண்டும் ரஷீதை அணுக்கு குழந்தையை திருப்பி கொடுக்க வலியுறுத்தியுள்ளார். குழந்தை திருப்பி கொடுக்காததால் ஜபீனா சம்பவம் குறித்து உமரபாத் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதனை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே உத்தரவின் பேரில் தனிப்படை அமைந்து விசாரணை நடத்தினர். அப்போது குழந்தை பல இடைத்தரகர்கள் மூலம் கைமாறி, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் குழந்தை இல்லாத தம்பதியிடம் ரூ.13 லட்சத்திற்கு விற்கப்பட்டதாக போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.இதனை தொடர்ந்து நாமக்கல் சென்ற போலீசார் சதீஷ்குமார் ஸ்ரீ ஹரிணி தம்பதியிடம் இருந்த குழந்தையை பத்திரமாக மீட்டனர். குழந்தை விற்பனையில் தொடர்புடைய ஜபீனா, ரஷித் அஹ்மத், புகழேந்தி, உமா மகேஸ்வரி, சதீஷ்குமார், ஹரிணி ஆகிய 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு நபர் குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். 2 மாத குழந்தை பணத்திற்காக விற்கப்பட்ட சம்பவம் ஆம்பூர் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





■ மதுரை திருமங்கலம் தியாகி விஸ்வநாததாஸ் அவர்கள் 140 வதுபிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தி ப ஆகாஷ் இஆப தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லத்தில் அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



■ மதுரை மாநகராட்சி தத்தனேரி பகுதியில் உள்ள மின்மயானத்தில் ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் உதவி ஆணையாளர் ரவிக்குமார் , உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் உதவி செயற்பொறியாளர் காமராஜ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# பயிர்க்கடன் தள்ளுபடியில் தமிழ்நாடு விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, ஜூன்.17-
பயிர்க்கடன் தள்ளுபடியில் தமிழ்நாடு விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். பெரு விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடனை 50 சதவீதம் தள்ளுபடி செய்ய வேண்டும். பயிர்க்கடன் தள்ளுபடி விவகாரத்தில் பாரபட்சம் காட்டுவது நல்ல நிர்வாகத்திற்கு அழகல்ல என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்

# தழும்புகள் இல்லாத நவீன சிகிச்சை: தென் தமிழகத்தில் முதன்முறையாக மார்பகக் கட்டி அகற்றிய மதுரை அப்போலோ



மதுரை, ஜூன்.17-
தென் தமிழகத்திலேயே முதன்முறையாக, தழும்புகள் இல்லாத வேக்யூம் அசிஸ்டெட் பிரஸ்ட் பயாப்ஸி (VABB/ VASB) தொழில்நுட்பத்தின் மூலம் மார்பகக் கட்டியை வெற்றிகரமாக அகற்றி, மதுரையில் உள்ள Apollo Specialty Hospital Madurai மருத்துவமனை புதிய சாதனை படைத்துள்ளது. தென்காசியைச் சேர்ந்த 20 வயது இளம்பெண் ஒருவர் கடந்த நான்கு மாதங்களாக இடது மார்பகத்தில் வலி மற்றும் வீக்கத்தால் அவதிப்பட்டு வந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அல்ட்ராசவுண்ட் பரிசோதனையில், தீங்கற்ற ஃபைப்ரோஅடினோமா (Fibroadenoma) கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து அவர் சிகிச்சைக்காக மதுரை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பாரம்பரிய அறுவை சிகிச்சைக்கு மாற்றாக, அல்ட்ராசவுண்ட் வழிகாட்டுதலுடன் கூடிய அதிநவீன வேக்யூம் அசிஸ்டெட் பிரஸ்ட் பயாப்ஸி (VABB) முறையை மருத்துவர்கள் தேர்வு செய்தனர். இந்த முறையில், வெறும் சிறிய துளை வழியாக 4×3 செ.மீ. அளவிலான கட்டி, 9நி VABB ஊசி மூலம் எந்தவித தையலும் இன்றி முழுமையாக அகற்றப்பட்டது. சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன், எந்தவித சிக்கலும் ஏற்படாததால் அந்த இளம்பெண் அன்றே வீடு திரும்பினார்.சிகிச்சையை மேற்கொண்ட கதிரியக்க நிபுணர் Dr. K. P. Santhosh Babu கூறுகையில், "இந்த நவீன தொழில்நுட்பம் மூலம் அறுவை சிகிச்சை இல்லாமல் தீங்கற்ற மார்பகக் கட்டிகளை முழுமையாக அகற்ற முடியும். குறைந்த வலி, விரைவான குணமடைதல் மற்றும் தழும்புகள் இல்லாத சிகிச்சை என்பதால், குறிப்பாக இளம் பெண்களுக்கு இது சிறந்த தீர்வாக அமைகிறது" என்றார். மருத்துவமனையின் மண்டல தலைமைச் செயல் அதிகாரி Dr. Nikhil Tiwari கூறுகையில், "நோயாளிகளின் சிரமத்தைக் குறைத்து, சிகிச்சை தரத்தை மேம்படுத்தும் உலகத் தரத்திலான நவீன தொழில்நுட்பங்களை தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறோம். இந்த சாதனை அதற்கான முக்கிய எடுத்துக்காட்டாகும்" என்றார். மருத்துவத் தலைவர் Dr. P. Shobana கூறுகையில், "இமேஜ்கைடட் சிகிச்சை முறைகள் பாரம்பரிய அறுவை சிகிச்சைகளின் தேவையை குறைத்து, பாதுகாப்பான மற்றும் துல்லியமான சிகிச்சையை வழங்குகின்றன. இதன் மூலம் நோயாளிகள் விரைவில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடிகிறது" என்று தெரிவித்தார்.




■ ஊட்டியில் ஆர்.ஜி பி. ஐ நடத்திய 6வது தேசிய அளவிலான வில்வித்தை போட்டியில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையிலிருந்து வீரவிதை வில்வித்தை அகாடமி மாணவர்கள் பயிற்சியாளர் கலை வளர்மணி டாக்டர் பெருமாள் தலைமையில் பங்கேற்றனர்.8 வயதுக்குட்பட்ட பிரிவில் திர்ஸந்த்குமார் முதல் இடத்தையும், ஆருசன் மூன்றாம் இடத்தையும், 10 வயதுக்குட்பட்ட பிரிவில் கலை எழிலன் முதல் இடத்தையும், சுஷாந்த் இரண்டாம் இடத்தையும், 12 வயதுக்குட்பட்ட பிரிவில் அதிரஞ்சன் முதல் இடத்தையும், பிரனிஷ் மூன்றாம் இடத்தையும், தேசிகா ஸ்ரீ மூன்றாம் இடத்தையும், 14 வயதுக்குட்பட்ட பிரிவில் கோபிகா முதல் இடத்தையும்,ராஜ்குமார் இரண்டாம் இடத்தையும், 16 வயதுக்குட்பட்ட பிரிவில் அருள்குமரன் மூன்றாம் இடத்தையும், 16 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் நித்தின்மெஸ்ஸி மூன்றாம் இடத்தையும் பெற்று மானாமதுரைக்கும், அகாடமிக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

# சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு அறுவை சிகிச்சை சாதனை



சிவகங்கை, ஜூன்.17-

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு நவீன மற்றும் சிக்கலான அறுவை சிகிச்சைகள் இலவசமாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வராஜ் தெரிவித்தார்.

இது குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது:சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர்தர நவீன மருத்துவ உபகரணங்கள் மூலம், தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான தரத்தில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நோயாளிகளுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் சிறந்த மருத்துவ சேவைகள் அளிக்கப்படுகின்றன.

மருத்துவர்கள் டாக்டர் தென்றல், டாக்டர் ரபிக், டாக்டர் சுமதி, டாக்டர் சிவசுப்பிரமணியன் மற்றும் டாக்டர் திருமலைகண்ணன் ஆகியோரின் கூட்டு முயற்சியால், பிறவியிலேயே காது கேளாத குழந்தைகளுக்கு பொருத்தப்படும் காக்ளியர் இம்ப்ளாண்ட் (Cochlear Implant) எனப்படும் செவித்திறன் கருவி அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.தனியார் மருத்துவமனைகளில் ரூ.10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை செலவாகும் இந்த சிகிச்சை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 145 குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர்களுக்கு பேச்சுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.காது, மூக்கு, தொண்டை (ENT) பிரிவில் இந்த ஆண்டு மட்டும் நான்கு குழந்தைகளுக்கு காக்ளியர் இம்ப்ளாண்ட் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சிகிச்சை பிரிவில் தமிழக அளவில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மூன்றாவது இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மேலூரைச் சேர்ந்த 33 வயது பெண் ஒருவர் நீண்ட நாட்களாக தலைவலி மற்றும் இடது நாசி வழியாக நீர் வடிதல் போன்ற பாதிப்புகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனைகளில், மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் ஏற்பட்ட துளை வழியாக மூளையில் உள்ள CSF (Cerebrospinal Fluid) திரவம் கசிந்தது கண்டறியப்பட்டது.

எண்டோஸ்கோப் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் நோயின் தன்மை உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நவீன முறையில் மூளை நீர்க்கசிவு சரிசெய்யும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது அந்த பெண் முழுமையாக குணமடைந்து நலமாக உள்ளார்.அதேபோல், சிவகங்கை அருகே உள்ள கோடந்தி கிராமத்தைச் சேர்ந்த 65 வயது முதியவருக்கு நாக்கில் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. நோய் பரவாமல் தடுக்க தேவையான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, அவர் தற்போது நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.சிகிச்சை பெற்ற இருவரும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று, தங்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சேவை குறித்து நன்றி தெரிவித்து, தற்போது உடல்நலம் சிறப்பாக இருப்பதாக கூறினர். சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இது போன்ற பல்வேறு சிறப்பு சிகிச்சைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சிவகங்கை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த சேவைகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர் மற்றும் மருத்துவக் கல்லூரி முதல்வர் கேட்டுக் கொண்டனர்.



# சிவகங்கை மேற்கு ஒன்றிய தவெக சார்பில் தமறாக்கியில் நீர்மோர் பந்தல் திறப்பு

சிவகங்கை, ஜூன்.17-

சிவகங்கை தெற்கு மாவட்டம் சிவகங்கை மேற்கு ஒன்றிய தவெக சார்பில் வடக்கு தமறாக்கி கிராமத்தில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது...மேற்கு ஒன்றிய தவெக செயலாளர் பில்லத்தி கண்ணன் தலைமையில் கிளைக் கழக செயலாளர்களான கந்தசாமி . குப்புசாமி ஆகியோரது ஏற்பாட்டில் நிறுவப் பட்டிருந்த நீர் மோர் பந்தலை சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் முத்துபாரதி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்...மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தமறாக்கி பிரபுக்கண்ணன். மாவட்ட மகளிரணி அமைப்பாளர் தமிழரசி . மாவட்ட வழக்கறிஞரணி சூரக்குளம் சுரேஷ் . இடைய மேலூர் முனியாண்டி அம்பலக்காரர் . மாவட்ட வர்த்தக அணி சசிகுமார் . தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் பரமேஸ்வரன் . செல்வமீனாள் .. முத்துக்குமார். பிரதீப் . ஆகியோரது முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய. கிளைக் கழக நிர்வாகிகளான சுரேஷ் . ஆறுமுகம் . லோகு . அசோக் . பாலமுருகன்சிவலிங்கம் . செல்லமுத்து . தமறாக்கி சசிகலா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்அங்கே கூடியிருந்த பொதுமக்கள் தவெக நிர்வாகிகள் செய்து வரும் மக்கள் பணிகளை வெகுவாக பாராட்டி சென்றனர்....



# திமுக மும்பை பொறுப்புக்குழு தலைவர் க.மு.மாணிக்கம் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து திமுகவினர் அஞ்சலி

செம்பூர், ஜூன்.17-

பச்சதிமுகவின் முதுபெரும் தலைவர் மேனாள் பாந்திரா பகுதிக்கழக செயலாளர் செயலாளர் க.மு.மாணிக்கம் உடல் நலக்குறைவால் 13.06.2026 அன்று இறந்தார் 14.06.2026 அன்று அவரது உடல் செம்பூர் மயானத்தில் எரியூட்டப்பட்டது.... அவருக்கு இறுதி மரியாதை மும்பை திமுக சார்பில் செய்யப்பட்டது கருப்பு சிவப்பு கழக கொடியை மும்பை திமுக பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு புறநகர் பொறுப்புக்குழு தலைவர் அலிசேக்மீரான், மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ,மாறன் ஆரியசங்காரன்,புறநகர் பொறுப்புக்குழு உறுப்பினர் ஜேம்ஸ்தேவதாசன் ஆகியோர் போர்த்தி மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.இந்நிகழ்வில் விசிக அமைப்பாளர் சாலமோன்ராஜா,மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன்,பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.ரவிச்சந்திரன், பேலஸ்துரைதாராவி திமுக முன்னாள் செயலாளர் ஆ.பாலசுப்பிரமணியன்தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரவிரஜினி,தே.ஸ்டீபன்,பாண்டியன்,பொய்சர் மூர்த்தி,அழகுராஜா,பாந்திரா பகுதி திமுகவைச் சேர்ந்த பொன்.இலக்குமணன்,பொன்.சுப்பிரமணியன்,மு.இராசேந் திர னெ ள,க.மு.முனியன்,ே க.காளியப்பன்,காசி,சின்னையன்,ராஜேந்திரகுமார் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்..



■ நீலகிரி மாவட்டம் உதகை சேரிங்கிராஸ் பகுதியில், சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு உதகை நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லீவன் பிறந்த தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், உதகை நகராட்சி ஆணையாளர் நித்தியா உட்பட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)கிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# மானாமதுரை அருகே விசிக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

மானாமதுரை, ஜூன். 17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் ஆகாஷ் டெலிசன் காவல்துறையினரால் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில், நூறு நாட்கள் கடந்தும் குற்றவாளிகள் கைது செய்யப்படாததை கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (விசிக) சார்பில் நேற்று முன்தினம் மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.மானாமதுரை பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விசிக சிவகங்கை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வே. பாலையா தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார். அவர் பேசுகையில், சம்பவம் நடைபெற்று 100 நாட்கள் ஆகியும் தொடர்புடைய குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது வேதனையளிப்பதாகவும், காவல்துறை காலம் தாழ்த்தும் போக்கை கைவிட்டு உடனடியாக குற்றவாளிகளை கைது செய்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஆதிவளவன், மாவட்ட துணைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மானாமதுரை (கிழக்கு) ஒன்றிய செயலாளர் இளையராஜா, நகர செயலாளர் பாரதிராஜன், ஒன்றிய துணைச் செயலாளர் பிரபாகரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தின் போது நீதிக்காக வலியுறுத்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்நிகழ்வு மானாமதுரை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# எட்டிவயல் பகுதியில் வாகன விபத்தில் அடையாளம் தெரியாத பெண் பலி தகவல் தெரிவிக்க வேண்டுகோள்

ராமநாதபுரம், ஜூன். 17-

ராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட எட்டிவயல் பகுதியில் கடந்த ஜூன் 11ஆம் தேதி இரவு நடைபெற்ற வாகன விபத்தில் அடையாளம் தெரியாத பெண் ஒருவர் உயிரிழந்தார். விபத்தில் உயிரிழந்த நபரின் புகைப்படத்தை கைப்பற்றி, அவரது அடையாளம்



மற்றும் உறவினர்கள் குறித்து தகவல் சேகரிக்கும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.இந்நிலையில், புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்பது குறித்த தகவல் யாருக்கேனும் தெரிந்திருந்தால் உடனடியாக சத்திரக்குடி காவல் நிலையத்தை 9498101624 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு காவல்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161